# தொடக்கப்பள்ளி சுவரில் மெட்ரோ ரயில் ஓவியம்

## ஆசிரியை, ஓவியர்கள் கௌரவிப்பு



சென்னை மாநகராட்சி பள்ளிச் சுவரில், மெட்ரோ ரயில் ஓவியம் வரைந்ததற்காக தலைமை ஆசிரியை த.வெற்றி செல்வி, ஒப்பந்ததாரர் பி.சரவணகுமார், ஓவியப்பணி மேற்கொண்ட ஜே.சுரேஷ் பாபு ஆகியோருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்த மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ்.

**சென்னை, அக்.20:** சென்னை பெருநகர மாநகராட்சி தொடக்கப் பள்ளி சுவரில் அழகிய மெட்ரோ ரயில் ஓவியம் வரைந்ததற்காக பள்ளித் தலைமை ஆசிரியை மற்றும் அந்த ஓவியங்களை வரைந்தவர்களை மெட்ரோ ரயில் நிர்வாகம் கௌரவித்தது.

சென்னை எண்ணூர் அன்னை சிவகாமி நகரில் உள்ள சென்னை பெருநகர மாநகராட்சி தொடக்கப்பள்ளியின் சுவரில் மெட்ரோ ரயில் போன்று அழகிய ஓவியம் வரைந்துள்ளனர். பள்ளி அலுவலக அறை மெட்ரோ ரயில் நிலையம் போலவும், வகுப்பறைகள் மெட்ரோ ரயில் பெட்டிகள் போலவும், வகுப்பறை வாசல்கள் மெட்ரோ ரயில் பெட்டியின் நுழைவு வாயில்கள் போன்றும் ஓவியம் வரையப்பட்டுள்ளது. இந்த ஓவியம் அனைவரையும் கவர்ந்து வந்தது.

இந்த ஓவியம் குறித்து மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து, அந்த ஓவியத்தை வரைந்தவர்களை கௌரவிக்க மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்தது. அதன்படி, அந்தப்பள்ளியின் தலைமை ஆசிரியை த.வெற்றிச்செல்வி, ஒப்பந்ததாரர் பி.சரவணக்குமார் ஓவியப்பணி மேற்கொண்ட ஜே.சுரேஷ்பாபு ஆகியோரை திங்கள்கிழமை வரவழைத்து கௌரவித்தனர். அவர்களுக்கு வெகுமதி மற்றும் நற்சான்றிதழ்களை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப்யாதவ் வழங்கிப் பாராட்டினார். நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜீவ் நாராயண் திரிவேதி(திட்டங்கள்), தலைமைப் பொதுமேலாளர் (மனிதவளம்) ஜி.ராஜரத்தினம் ஆகியோர் உடன் இருந்தனர்.